02.02.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.145/2025</u>

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேந்தர் | | |
| த/பெ | நாகப்பன் | | |
| கிராமம் | அற்பிசம்பாளையம் | தொழில் | இசைக்குழுவில் பேண்ட் வாசிக்கும் வேலை. |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 19/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 02.02.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

## <u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் எஸ்.எம்.டி.புதிய ராகம் பேண்ட் இசைக்குழுவில் பேண்ட் வாசிக்கும் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2023 ஆம் வருடம் ஒரு நாள் இரவு சுமார் 7.00 மணியளவில் நான் வேலைக்கு சென்று விட்டு, சின்ன பாபு சமுத்திரம் வழியாக இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, சின்னபாபு சமுத்திரத்திலிருந்து ரசபுத்திர பாளையம் செல்லும் ரோட்டின் அருகில் போலீஸ்காரர் நிறுத்தி நீ எங்கு சென்று வருகிறாய் என்று கேட்டார்கள். நான் விவரம் சொன்னேன். அதற்காக எழுதாத ஒரு வெள்ளை தாளில் என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் எழுத்து மூலமான புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் எழுதாத பேப்பரில்தான் போட்டேன். வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது. இது சம்பந்தமாக அதன் பிறகு என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை. அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆகும்.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

கடந்த 22/12/2023-ம் தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் சின்னபாபு சமுத்திரம் ஆர்ச் அருகில், ஒரு நபர் என்னை வழிமறித்தார் என்றும், கத்தியை காட்டி மிரட்டி என் பாக்கெட்டில் இருந்த ரூ.200 - யை பறித்துக்கொண்டார் என்றும், மேலும் அவர் பெயர் சின்னபாபு சமுத்திரத்தை சேர்ந்த ரவுடி அறிவழகன் என்று தெரிந்து கொண்டேன் என்றும், பின்பு தன் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி, இந்த விவரத்தை வேறு யாரிடமாவது சொன்னால் இந்த கத்தியால் குத்தி கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார் என்றும், பின்பு இது சம்பந்தமாக கண்டமங்கலம் காவல் நிலையத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக புகார் ஒன்றை கொடுத்துவிட்டு, தற்போது எதிரி கேட்டுக் கொண்டதன் பேரில், உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**